1979 ஏப்ரல் 19]

வேண்டும், உடலமைப்பைப் பார்க்க வேண்டும். இவைகளெல்லாம் அவர்களுக்குத் தள்ளுபடி செய்து, தீயணைப்பு அலுவலகத்தில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. 500 ரூபாய் ரொக்கப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவர் பதக்கம் என்பது உயர்ந்த பதக்கம். அதுவும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலம், வீடு குறித்த பத்திரப் பதிவு.

வினா எண் 736,—*திரு. டி. ஆர். ராஜாராம் ரெட்டி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

போட்டி முதலான காரணங்களால் எங்கே ஓரிடத்தில் கூடுதலான விலைக்கு நிலமோ வீடோ விற்கப்படும்போது பக்கத்தில் உள்ளவைகளுக்கும் அதே விலைக்குச் சரியான அளவு பத்திரங்களில் எழுதி வருமாறு கூறி ரிஜிஸ்தரார் பதிய மறுத்து கூடுதல் பத்திரங்கள் சேர்க்கும்படி கட்டாயப்படுத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, பதிவு அலுவலர்கள் யாரும் அப்படிக் கட்டாயப்படுத்தி அதிகமாகக் கட்டணம் கேட்கவில்லை என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, இப்பொழுது கிராமங்களில் ரெஜிஸ்தார் ஆபிசிலே—நான் உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் பல தவறுகள் நடக்கின்றன. ரெஜிஸ்தர் செய்வதில் பல தவறுகள் நடக்கின்றன. அந்த முறையை மாற்றி வேறு விதமாக அரசு பரிசீலனை செய்து அல்லது நடவடிக்கை எடுத்து, ஏதாவது ஒன்றைச் செய்ய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, ''ஏதாவது ஒன்றை'' விரைவாகச் செய்ய இந்த அரசு என்றைக்கும் முன் வராது. நல்லது எது என்று சொன்னால் அதைச் செய்ய முன்னுக்கு வரும். தவறு நடக்கிறது என்றால் என்ன தவறு என்று சொன்னால் அதைப் போக்கடிக்க இந்த அரசு ஆவன செய்யும். தவறு என்று பொதுவாகச் சொல்வது, அதுவும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்வது சரியல்ல.

திரு. ந. தனசேகரன்: பேரவைத் தலைவரவர்களே, மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் ஒரு பத்திரப் பதிவுக்குக் கூடுதலான அளவு முறை வைத்திருக்கிறார்கள். அந்த அளவு முறைகளை மீறிச் சில குறும்புகாரர்கள் அதிகப்படியாக 100 ரூபாய்க்குப் பதில் 1,000 ரூபாய்க்குப் பதிந்து விடுகிறார்கள். அதேபோல் பக்கத்திலே உள்ளவர்களும் பதிய வேண்டுமென்று சொல்லுகின்ற

நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்க நிலையான ஆய்வு செய்து முறையான அளவுக்குச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, குறும்புக்காரர்கள் எதைச் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் சில நேரங்களில் நிலங்களை விற்பதில் ஏற்படுகின்ற போட்டியின் காரணமாக விலை ஏறுகிறது. அப்படி விலை ஏறும்பொழுது, அதற்குப் பத்திரச் செலவு அதிகம் ஆகிறது. அப்படி அதிகம் ஆனதற்குப் பிறகு மற்றவர்களும் பத்திரம் பதிவு செய்யும்பொழுது அதைப்போல பணம் கட்ட வேண்டுமென்ற முறை இருந்தது. அப்படியெல்லாம் செய்யாமல், சந்தை விலை (Market Value) என்று அதைப்பற்றிப் பார்த்து வாங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வாங்குபவர்களும், விற்பவர்களும் எந்த விலை என்று சொல்லிப் பத்திரம் வாங்குகிறார்களோ அதையே அவர்களால் அதில் எழுதப்படுகிறது. எங்கேயாவது சந்தேகம் ஏற்பட்டால் வருவாய்த் துறைக்கு அதைப்பற்றிச் சொல்லப்படுகிறது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்கள்.

வினா எண். 737—

*திரு. கோ. இளங்கோவன், திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஈரோட்டில் பெரியார் நூற்றாண்டினையொட்டி 17–9–1978, 18–9–1978 ஆகிய நாட்களில் எடுத்த விழாக்களுக்குச் செலவிடப்பட்ட தொகை யாது?

(ஆ) அதுபோது அரசு ஏதேனும் தீர்மானங்கள் நிறைவேற்றியது உண்டா?

(இ) ஆமெனில் அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே,—

(அ) ரூபாய் 4,46,492.

(ஆ) மற்றும் (இ): அரசு தீர்மானமெதுவும் நிறைவேற்றவில்லை. ஆனால் மாண்புமிகு முதல்வரவர்கள் சில கொள்கை அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள்.